04 DEC 2009
Eastern University, Sri Lanka.

# Eastern University, Sri Lanka

## Faculty of Commerce and Management

## External Degree Programme

## Part - III Examination in Business Administration / Commerce

## 2002/2003 (June/July 2009) (External) - Repeat

## BBA/COM 401(b) Taxation

BBA/ COM 401 (B) TAXATION

சகல வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 02 மணித்தியாலங்கள்

01. திரு. மோகன் கொழும்பில் உள்ள புடவைக் கடையொன்றின் உரிமையாளர் ஆவார். அவரது 31.03.2002ல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.

31.03.2002ல் முடிவ்டைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| சம்பளங்கள் | | 950,000 | மொத்த இலாபம் | 3500,000 |
| சேமலாப நிதியம் | | 114,000 | தேறிய வட்டி | 72,000 |
| புரள்வுவரி | | 120,000 | அறவிடமுடியாக் கடன் ஒதுக்கம் | 8,000 |
| மின்சாரம் | | 30,000 | லொறி வாடகை வருமானம் | 320,000 |
| வட்டி | | 110,000 | | |
| பெறுமானத்தேய்வு | | | | |
| காணி, கட்டடம் | 100,000 | | | |
| பொறிகள், இயந்திரம் | 15,000 | | | |
| மோட்டார் வாகனம் | 380,000 | 495,000 | | |
| காப்புறுதி | | 60,000 | | |
| மோட்டார் வாகன பராமரிப்பு | | 360,000 | | |
| நன்கொடைகள் | | 45,000 | | |
| வான் விற்பனை நட்டம் | | 30,000 | | |
| பிரயாணம் | | 40,000 | | |
| குத்தகை வாடகை | | 330,000 | | |
| வாடகை | | 300,000 | | |
| காசாளர் மேசை | | 20,000 | | |
| ஏனைய செலவுகள் | | 35,000 | | |
| தேறிய இலாபம் | | 861,000 | | |
| | | 3900,000 | | 3900,000 |

1. நிலையான சொத்துக்கள்

| சொத்துக்கள் | ஆரம்ப மீதி கொள்விலையில் | சேர்த்தல் | விற்பனை | மீதி |
|---|---|---|---|---|
| காணி, கட்டடம் | -- | 2,500,000 | -- | 2,500, |
| பொறிகள், இயந்திரம் | 150,000 | -- | -- | 150, |
| மோட்டார் வாகனம் | 1700,000 | 900,000 | 700,000 | 1,900, |

2. பெறுமானத்தேய்வு ஒதுக்கம்

| சொத்துக்கள் | ஆரம்ப மீதி | ஏற்பாடு | விற்பனை | மீதி |
|---|---|---|---|---|
| காணி, கட்டடம் | -- | 100,000 | -- | 100, |
| பொறிகள், இயந்திரம் | 150,000 | 15,000 | -- | 30, |
| மோட்டார் வாகனம் | 880,000 | 380,000 | 280,000 | 980, |

3. இவ்வருடத்தில் அவர் பழைய கட்டடமொன்றைக் கொள்வனவு செய்து அத இடித்துப் புதிய கடைக்கட்டடம் ஒன்றைக் கட்ட ஆரம்பித்தார். இவ்வருடத் கட்டடச் செலவு 1500,000/- ரூபாவாகும். கட்டட வேலைகள் பூர்த்தியாகவில்லை.

4. பொறிகள், இயந்திரங்கள் 2000 ஏப்ரலில் பொருத்தப்பட்ட குளிரூ இயந்திரத்திற்கான செலவைக் குறிக்கின்றது.

5. மோட்டார் வாகன ஆரம்ப மீதி கார் ஒன்றினையும் 01.04.1999ல் கொள்வ செய்யப்பட்ட வான் ஒன்றையும் உள்ளடக்குகின்றது. அவர் 2001 யூன் மாதத் வானை விற்பனை செய்துவிட்டு புதிய வான் ஒன்றை 2002 ஜனவரியில் கொள்வ செய்தார். கார் 1998/99ம் வரிமதிப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்டதாகும்.

6. <u>அறவிடமுடியாக் கடன்ஒதுக்கக் கணக்கு</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கடன்பட்டோர் | | 3,000 | <u>மீதி</u> | | |
| இலாப நட்டக் க/கு | | 8,000 | விசேடம் | 6,000 | |
| <u>மீதி</u> | | | பொது | 22,000 | 28, |
| விசேடம் | 7,000 | | காசு | | 8, |
| பொது | 18,000 | 25,000 | | | |
| | | **36,000** | | | **36,** |

அ. ஆரம்பமீதியில் காட்டப்பட்ட விசேட ஒதுக்கம் திரு. ராஜாவிடம் இரு கிடைக்கவேண்டிய 4,000/- ரூபாவையும், கலீலிடமிருந்து பெறவேண்டிய 2,00 ரூபாவையும் உள்ளடக்குகின்றது.

ஆ. பதிவழிப்புக்களில் முன்னாள் ஊழியர் ஒருவரது காசுக்கடன் 1,000/- வும், திரு. நாதனின் வியாபாரக்கடன் 2,000/- வும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

04 DEC 2009
Eastern University, Sri Lanka

இ. அறவீடுகள் முன்பு பதிவழிக்கப்பட்ட கடன்கள் சார்பாகப் பெறப்பட்டனவாகும்..

ஈ. இறுதி மீதி - விசேடம்

| | |
|---|---|
| ராஜா | 4,000 |
| கலீல் | 2,000 |
| ராமன் | 1,000 |

7. இவ்வருடத்திற்கான அவரது மொத்த விற்பனை 13,000,000/- ஆகும்.

8. காப்புறுதியில் அவரது ஆயுட் காப்புறுதி 30,000/- உள்ளடக்கப்பட்டுள்ளது.

9. மோட்டார் வாகனப் பராமரிப்பு செலவுகளில் உரிமையாளர் வீட்டிலிருந்து கடைக்குக் காரில் சென்றுவருவதற்கான செலவு ரூபா. 30,000/- உள்ளடங்கும்.

10. நன்கொடைகள்

| | |
|---|---|
| விளையாட்டுக் கழகம் | 15,000 |
| அங்கீகரிக்கப்பட்ட அறம் | 30,000 |

11. பிரயாணச் செலவுகளில் புடவை கொள்வனவுக்காக உரிமையாளர் இந்தியா சென்றுவந்த செலவு 25,000/- சேர்க்கப்பட்டுள்ளது.

12. அவர் குத்தகை ஒப்பந்தம் ஒன்றின் கீழ் 01.05.2001லிருந்து மூன்று வருட காலத்திற்கு லொறி ஒன்றைப் பெற்றிருந்தார். செலுத்த வேண்டிய மாதாந்த குத்தகை வாடகை 30,000/-.

13. வாடகை

| | |
|---|---|
| கடை வாடகை | 120,000 |
| முகாமையாளர் வீட்டு வாடகை | 180,000 |

14. ஏனைய செலவுகள்

| | |
|---|---|
| எழுது கருவிகள் | 10,000 |
| வருமானவரி | 15,000 |
| விளம்பரம் | 10,000 |
| | **35,000** |

2001/02 ம் வரிமதிப்பாண்டுக்கு திரு. மோகனின் வரிவிதி வருமானத்தைக் கணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளீர்கள்.

(**55** புள்ளிகள்)

02. திரு. முனாஸ் வரையறுக்கப்பட்ட எக்ஸ்வை தனியார் கம்பனியின் விற்ப முகாமையாளராவார். 31.03.2002 முடிவடைந்த ஆண்டுக்கான அவரது ஊ வருமானமும் ஏனைய வருமான விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

அ. சம்பளம்

| | | |
|---|---|---|
| சம்பளம் | | 330,000 |
| ஊக்குவிப்பு | | 100,000 |
| பிரயாணப்படிகள் | 60,000 | |
| கழி - செலவுகள் | 24,000 | 36,000 |
| உபசரணைக் கொடுப்பனவுகள் | | 30,000 |

ஆ. கம்பனி சேமலாப நிதியத்திற்கான அவரது பங்களிப்பாக அவரது சம்பளத்திலிரு 8% ஐ கழித்துள்ளது.

இ. பிரயாணச் செலவுகள் 24,000/- அவர் வீட்டிலிருந்து வேலைத்தலத்திற் அங்கிருந்து வீட்டிற்கும் வருவதற்காக ஏற்பட்ட செலவினைக் குறிக்கின்றது.

ஈ. அவர் உபசரணைக் கொடுப்பனவுகள் முழுவதையும் கம்பனியின் விற்ப முகவர்களை உபசரிப்பதற்காக செலவு செய்துவிட்டதாகக் கோருகின்றார்.

உ. அவர் கம்பனியால் வழங்கப்பட்ட வீடொன்றில் வசிக்கின்றார். அவ்வீட சோலைவரி மதிப்பீடு 80,000/-, சோலைவரி 30%, கம்பனி வீட்டு உரிமையாளரு மாதம் 8,000/- வாடகை செலுத்துகின்றது.

ஊ. அவர் 1998ல் கொள்வனவு செய்த தனது வீட்டிலிருந்து மாத வாடகை 7,00 பெற்றுக் கொண்டார். வீட்டின் பரப்பளவு 1,200 சதுரஅடி. சோலைவரி மதிப் 80,000/- சோலைவரி 30% தில் செலுத்தப்பட்டது.

எ. அவர் எக்ஸ்வை தனியார் கம்பனியிலிருந்து 69,000/- பங்குலாபம் பெற் கொண்டார். விபரங்கள் பின்வருமாறு :

| | |
|---|---|
| வரிக்குட்படும் இலாபத்திலிருந்து | 30,000 |
| வரிவிலக்கு இலாபத்திலிருந்து | 15,000 |
| விலைகோரப்பட்ட கம்பனியிலிருந்து பெறப்பட்டது | 20,000 |
| வேறொரு வதிவுள்ள கம்பனியிலிருந்து பெறப்பட்டது | 8,500 |
| | 73,500 |
| கழி - நிறுத்தி வைத்தல் வரி | 4,500 |
| | **69,000** |

ஏ. இவ்வருடத்தில் கடைக்கட்டடமொன்றை 1,000,000/- க்கு விற்பனை செய்தார். இது அவரது தந்தையார் 1987ல் 600,000/- பெறுமதியிட்டு நன்கொடையாக வழங்கியதாகும். அவரது தந்தையார் இக்கட்டடத்தை 01.06.1982ல் 150,000/- ரூபாவுக்கு கொள்வவு செய்திருந்தார். விற்பனைத் திகதிவரை காணியில் இடம்பெற்ற செலவுகள் பின்வருமாறு :

| | |
|---|---|
| 1982ல் முத்திரைக் கட்டணமும் நொத்தாரிசுக் கட்டணமும் | 5,000/- |
| 1996ல் கட்டட நிர்மாணம் | 400,000/- |
| விற்பனைத் தரகு | 20,000/- |
| விற்பனைத் தொகையில் தந்தையாருக்கு நன்கொடை | 100,000/- |

வரிமதிப்பாண்டு 2001/ 2002 க்கு திரு. முனாஸ் செலுத்த வேண்டிய வரியைக் கணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளீர்கள்.

**(30 புள்ளிகள்)**

03. பின்வரும் தலைப்புக்களில் ஏதாவது மூன்றிற்கு சிறுகுறிப்பெழுதுக.

அ. பெறுமதிசேர் வரிக்கான (VAT) வழங்கற்பெறுமதி

ஆ. பெறுமதிசேர் வரிக்கான வரிவிலக்கு வழங்கலும் வரித்தவிர்ப்பு வழங்கலும்.

இ. உள்நாட்டிறைவரிச் சட்டத்தின் கீழ் பிள்ளை எனப்படுபவரின் வரைவிலக்கணம்.

ஈ. உ. பொ. செ (PAYE) வரிமுறை.

**(15 புள்ளிகள்)**